விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 2 இதழ் 67
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-04-1995

## வடபகுதி படை முகாம்களுக்கு இராணுவ தளபதி திடீர் விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா வடபகுதி இராணுவ முகாம்களுக்கு திடீர் விஜயம் செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை அவதானித்ததுடன் படையினருக்கு உற்சாகமூட்டும் நடவடிக்கைகளையும்மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வசாவிளான் இராணுவ முகாமில் நேற்று ராணுவ தளபதி ஜெரிடி சில்வா படையினர் மத்தியில் உரையாற்றுகையில்:

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அமுல் நடாத்துவதில் இராணுவம் தனது கடமைகளை முழுமையாக நிறை

(6ம் பக்கம் பார்க்க)

## கடத்தலை முறியடிக்க விசேட பிரிவு அமைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக விசேட பிரிவு ஒன்றை சுங்கப் பகுதியினர் நிறுவியுள்ளனர்.

கட்டுநாயக்க விமானநிலையத்தினூடாக பல கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்கள் அண்மைக் காலங்களில் கடத்தப்பட்டு வந்தது தற்போது தெரியவந்ததைத் தொடர்ந்தே இந்த விசேட பிரிவு அமைக்கபபட்டுள்ளது.

அத்துடன் மேற்படி விமான

(6ம் பக்கம் பார்க்க)

# அரசு-புலிகள் இடையிலான அமைதிப்பேச்சு பற்றி சந்திரிகா இந்தியாவுக்கு விளக்குவார்!

## மே 2-ல் பிரதமர் ராவை சந்திக்க ஏற்பாடு!!

[கொழும்பு]

எதிர்வரும் மே இரண்டாம் திகதி இந்தியா செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் அவற்றின் முன்னேற்றம் பற்றியும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கும். ஏனைய தலைவர்களுக்கும் விளக்கவுள்ளார்.

பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள எதிாவரும் 26-ம் திகதி பாரிஸ் செல்லும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா பாரிஸ் கூட்டத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா செல்லவுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் சமாதானப் பேச்சு வாாத்தைகள் தொடர்பாக

(6-ம் பக்கம் பார்க்க)

மட்டு- மாவட்டத்தில்

## இராணுவ கெடுபிடிகள் தொடர்கின்றன

[மட்டுநகர்]

மட்டக்களப்பில் கடும் கெடுபிடி நிறைந்த சோதனைகளும் புதிய புதிய காவலரண்களும் திறந்துகொண்டேயிருக்கிறது

புலனாய்வுத் துறையினர் மட்டு. மாவட்டத்தில் தீவிரமாக தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

பாதுகாப்பு பிரதியமைச்சர் கேணல் அனுருத்த இங்குள்ள படை முகாம்களுக்கு விஜயம் செய்த பின்னர் படையினரின் நடவடிக்கைகள் மிகத்தீவிரமாக இருப்பதாக தெரியவரு

(6-ம் பக்கம் பார்க்க)

## உயர்மட்ட ஆலோசனையின்பின் ஜனாதிபதி தலைவருக்கு கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைவர் பிரபாகரனுக்கு இறுதியாக அனுப்பிவைத்த கடிதம் ஐந்து மணித்தியாலய உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் பின்னரே தயாரிக்கப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நுவரேலியாவிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ் தலத்தில் இந்த உயர்மட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. கடந்த புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணி வரை இந்த உயர்மட்ட

(6ம் பக்கம் பார்க்க!

## சூரியன் இன்று நண்பகல் பலாலிக்கு நேரே உச்சம்

(யாழ்ப்பாணம்)

இன்று பகல் 12 மணி 11 நிமிடத்திற்கு சூரியன் பலாலிக்கு நேரே வருமென வானியல் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நண்பகல் 12 மணி 11 நிமிடத்திற்கு சூரியன் கிளிநொச்சியில் கொக்காவில்,முல்லைத்தீவு பகுதிகளுக்கு நேரே நின்று உச்சம் கொடுத்துள்ளது

நேற்று வடபகுதியில் வழமையைவிட மிக அதிகமான வெப்பம் காணப்பட்டதுகுறிப்பிடக்சக்கது. ரி

## இடம்பெயர்ந்த மாணவரின் பிரச்னைகள் ஆராய்வு

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும் மாணவர்களின் பிரச்னைகள் தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மாணவர்களின் கல்வி நிலை, பாடசாலை வசதி, கற்பித்தல் முறைகள்போன்றவை தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

புத்தளம் மற்றும் இதர இடங்களில் வடபகுதியிலிருந்து, இடம்பெயர்ந்த மாணவர்கள் வசித்து வருவதும இங்கு குறிப்பிடத்தக்கது

க இ சிரி

## 5ம் கட்ட பேச்சில் மூத்த அமைச்சர் ஒருவர் கலந்து கொள்வார்!

[கொழும்பு]

அரசாங்க தூதுக்குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் 5-ம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தின் சார்பில் முக்கிய அமைச்சர் ஒருவர் கலந்து கொள்வார்என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திற்கு பதில் கிடைத்ததும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி சந்

(6ம் பக்கம பார்கக)

## அரசு - புலிகள் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படும் இதனையே ஜனாதிபதி சந்திரிகா கடந்த 12ம் திகதி தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் கோடிகாட்டி நிற்கிறது என மூத்த அரசியல்வாதிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப்பிரச்னைக்கு தீர்வுகாணும் முகமாக விடுதலைப்புலிகள் முன்வைத்த நான்குகோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி எடுத்துள்ள சில நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்படுகிறது.

சில விடயங்களுக்கு விடை

(6-ம் பக்கம் பார்க்க)

சென்னையில்

## இந்து முன்னணிக் கட்டிடம் குண்டு வைத்து தகர்ப்பு

(சென்னை)

சென்னை நகரில் நேற்று மாலை இந்து முன்னணி என்ற அமைப்பின் தலைமைச் செயலகம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

நேற்று மாலை 4மணியளவில் இக்கட்டிடம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெளிவந்துள்ளது

A/L மாணவருக்கு உகந்த பகுதி II இற்கான விஞ்ஞானிகளும், கண்டுபிடிப்புகளும் தொகுப்பு க. சத்தியசீலன் [யாழ் பல்கலைக்கழகம்) விற்பனை பாலாஜி, யாழ்ப்பாணம். [ஏ-4868]

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1420)

### தவறிவிட்டது.

10-04-95 திங்கள் அன்று ஓமந்தை பஸ் நிலையத்தில் எனது கறுப்புநிற Bag உடன் புதிய உடுப்புகளும், முக்கியமாக வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரைக் குறிப்புகள் உடன் தவறிவிட்டது. தயவு செய்து யாராவது அதனைக் கண்டெடுத்திருந்தால் கீழ்க் காணும் விசாசத்திற்கு தொடர்ப கொள்ளவும். பூ. பகீரதி, மே/பா, பூ சுரேஸ்வரன், இணுவில் தெற்கு, இணுவில். (சி 1451)

### புத்தாண்டுதின விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசச் செயலகம் நடாத்தும் தமிழ்புத்தாண்டு தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

### தங்கப்பதக்கம் பெற்றார்

(நெல்லியடி)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையேயானதடகள விளையாட்டும் போட்டியில் 400 மீற்றர் தூரத்தை 50.07 செக்கன்களில ஓடி சாதனையை நிலைநாட்டிய வடமராட்சியைச் சேர்ந்த இளைஞருக்கு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்துறை மாணவனும், கரவெட்டியைச் சேர்ந்தவருமான அருமைத்துரை அகிலன் என்னும் இளைஞரே கடந்த 1ம்‘ 2ம் திகதிகளில் இடம்பெற்ற போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றவராவார். 160-சி

# றெயில்வே ஓய்வூதியம் கச்சேரிக்கு மாற்றம்

(மானிப்பாய்)

யாழ் மாவட்டத்தில் புகையிரதத் திணைக்கள ஓய்வூதியம் பெறும் சகல ஓய்வூதியர்களினதும் ஓய்வூதியம் இவ்வருடம் பங்குனி மாதத்திலிருந்து யாழ். கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக செயலக ஓய்வூதியக் கொடுப்பனவுக் கிளையில் நேரில் வந்து தங்கள் கோவையைத் திறந்தவர்களுக்கு பங்குனி, சித்திரை மாதங்களுக்குரிய ஓய்வூதியம் அவர்களுக்குரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை தங்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் கோவை திறக்காதவர்களும் ஓய்வூதியக் கொடுப்பனவுகிளைக் கணக்காளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 71-ரி

# மேலும் 321 அகதிகள் யாழ். வந்து சேருவர்

(திருநெல்வேலி)

இம்மாதம் 26ம் திகதி இந்தியாவிலிருந்து மேலும் ஒரு தொகுதி அகதிகள் யாழ். வந்து சேர உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து வந்து தற்போது வவுனியாவில் தங்கியிருக்கும் 99 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் யாழ்ப்பாணம் வந்து சேருவார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் அழைத்துவரவுள்ளனர். குருநகர், நெல்லியடி, வல்வெட்டித்துறை, கல்வியங்காடு, உடுப்பிட்டி முதலிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்நாட்டிலிருந்து இம்மாதம் ஆயிரக்கணக்கானோர் மன்னாருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (157-ரி)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—04—15

சனி இரவு

8-02 புரட்சிக்குரல்
8-05 நிகழ்வும் பகிர்வும்
8-20 நேயர் கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 கலந்துரையாடுவோம் ‘‘தோர்வு நோக்கில் இன்றைய தமிழ் மாணவர் கல்விநிலை‘‘

1995—04—16

ஞாயிறு காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 களத்தில் மலர்ந்தவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—04—15

சனி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 வேங்கையின் நெஞ்சம்
5-30 அறிவியல் வினாடி வினாப் போட்டி
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 பாமாலை
6-15 என் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### புனித நீக்கிலாஸ் திருவிழா

(அரியாலை)

நாவாந்துறை புனித நீக்கிலாஸ் முனிந்திரனின் வருடாந்த திருவிழா இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுளளன. அதற்கான ஆயத்தங்கள், புனரமைப்பு வேலைகள், திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. -59

### நல்லூரில் இந்துசமயப் பேரவை தலைமையகம்

(திருநெல்வேலி)

இந்துசமயப் பேரவையின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் மாலை நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்துசமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி முத்தையா தலைமையில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள ஆசியுரை வழங்கினர். -157

### மீட்கப்பட்ட சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை காவல்பணிமனைகளால் மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் பருத்தித்துறை தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, அதன் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைக்காட்டிப்பெற்றுக்கொள்ளலாம் என குறித்த மன்றின் நீதியாளர் அறியத் தந்துள்ளார்

# தியாகி அன்னைபூபதி நினைவாக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி வட்ட சிற்றூர் ரீதியாக இன்று நடைபெறவுள்ள நினைவுக் கருத்தரங்குகள் வருமாறு:

கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்: கோண்டாவில் நாராயண ச. ச. நி, நீதவான் குடியிருப்பு சங்கானை, சத்தியக்காடு குடியிருப்பு வடக்கம்பரை, மாவீரர் ச. ச. நி. பொம்மைவெளி, புத்தூர் கிழக்கு குருமரகுருபன் ச. ச. நி. வடலியடைப்பு ச. ச. நி. சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையடி, தெல்லிப்பளை வட்டம் காளிகோவிலடி.

மாதா கோவிலடி துன்னாலை வடக்கு, கரவெட்டி, கட்டைவேலி கோவிற்சந்தை,

பளை மாசார் ச. ச. நி., நவசக்தி ச. ச. நி. மந்துவில் கிழக்கு, கைதடி சீலன்நகர் அப்பன் குடியேற்றத் திட்டம்.

### சிரமதானங்கள்

கொலனி நீர்வேலி தெற்கு, அளவெட்டி மணற்புலம் முகாம், இணுவில் தியேட்டர் முகாம் நீதவான் குடியிருப்பு சங்கானை, சத்தியக்காடு சித்தன்கேணி. -ம

மத்தி கிழக்கு நாடுகளுக்கு

# இலங்கை பணிப் பெண்கள் செல்வதற்கு விரைவில் தடை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு இளம் பெண்களை வேலைவாய்ப்புக்காக அனுப்புவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று ‘லக்பிம’ பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்த தொழிலமைச்சர் அங்கு இளம்பெண்கள் படும் அவஸ்தைகளை நேரில் பார்த்த பின்பே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண்களை அனுப்புவதை தடை செய்வதற்கு சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது மத்தியகிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பில் உள்ள 5 லட்சம் இலங்கையர்களில் மூன்று லட்சம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

ஊழல், கொலை குற்றச்சாட்டுக்களை ஆராய

# ஆணைக்குழு நியமிக்குமாறு சிறிசேன கூரே கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சிரிசேனகூரே சடந்த காலத்தில் தனக்கெதிராக ஐக்கியதேசியக் கட்சியினரால் சுமத்தப்பட்டுள்ள ஊழல், கொலைக் குற்றச்சாட்டுக்களில் தாம் சம்பந்தப்பட்டுள்ளதா

(5-ம் பக்கம் பார்க்க)

### பழைய செய்தித் தாள்களுக்கான கேள்வி அறிவித்தல்

1972ம் ஆண்டில் இருந்து 1976ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் பிரசுரமாகி வெளிவந்த அனைத்து பத்திரிகைக்குமான கேள்விகள் கோரப்படுகின்றன. இக்காலப்பகுதியில் தங்களினால் சேகரிக்கப்பட்டுள்ள

- ★ ஈழநாடு
- ★ வீரகேசரி
- ★ தினகரன்
- ★ தினபதி
- ★ சுதந்திரன

ஏனைய பிற பத்திரிகைகள் (குறைந்தஎண்ணிக்கையாக இருப்பினும்) இருப்பின் அதற்கான பெறுமதியைக் குறிப்பிட்டு மொத்தம் எவ்வளவு உண்டுஎன்பதை முழு விபரத்துடன்

1—5—95 இற்கு முன் அறியத்தரவும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

மாவீரர் படிப்பகம்
பலாலி வீதி, கோண்டாவில்

(சி-1446)

## குறிஞ்சி மருந்தகம் யாழ்ப்பாண நகரத்தில்

கிளையொன்றை மங்களகரமாக இன்று ஆரம்பித்து வைககின்றது.

நிகழும் யுவ வருடம் சித்திரைத் திங்கள் 02-ம் நாள்[1 04-1995] சனிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் வரும் சுபவேளையில்

கேணல் கிட்டு சாலை 558 ம் இலக்க கட்டிடத்தில்

# குறிஞ்சி மருந்தகம்

மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள். நண்பர்கள் அனைவரையும் திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தங்களது வரவு எம்மை மகிழ்ச்சிகொள்ள வைக்கும்.

உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்கள்;
வை. கணேசரெத்தினம்,
வை. யோகரெத்தினம்.

தலைமையகம்;
குறிஞ்சி மருந்தகம்:
பலாலி வீதி, திருநெல்வேலி. (எ 4872)

### மணிவாக்கு

நாம் நமது வருவாயில் ஒரு சிறியபாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கி வைத்து அதனை அவர்களுக்கு அன்புடன் தந்து மறுமைக்கு மாறு நலனைத் தேடிக் கொள்ள வேண்டும்.

- அருணகிரிநாதர்

## நமது நோக்கு

### மோதல் தவிர்ப்பு மீறல்!

பல ஆண்டுகளாக நாட்டைப் பாதித்த உள்நாட்டுப் போரைத் தணிக்க - தவிர்க்க - மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

ஆட்சி மாற்றத்தின் முதல் நன்மை இது என உலகெங்கும் ப்ரசாரம் செய்யப்பட்டது, உதவி பெறும் நோக்கோடு!

அரச அறிக்கைகளின் அடிப்படையில், வெளிநாடுகள் பலவும் இது நல்ல திருப்பம் என எண்ணிக் கொண்டு இலங்கை அரசைப் பாராட்டிச் செய்திகள் அனுப்பத் தவறவில்லை.

ஆனல் - உள்நாட்டிலே இந்த ஒப்பந்தம் எவ்வாறு அமுல் செய்யப்படுகின்றது? குறிப்பாக - வடகிழக்கின் நிலை என்ன?

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் தலைமையில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும என்பதும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதி. அதன்படி நியமிக்கப்பட்டனவா?

ஒப்பந்த வாசகங்களை, ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளை, வாக்களிக்கப்பட்ட உறுதிமொழிகளை நேர்மையான முறையில் கடைப்பிடிக்க வேண்டியதே அரச தர்மம்.

ஆனல் - ''தர்மத்துவீபம்'' எனப் பெயரளவிற் பெயர் கொண்ட நாட்டிலே, அரச நடவடிக்கைகள் வேறுவிதமாக நடந்து வருவதாகச் செய்திகள் வருகின்றன.

புலிகளின் படகு மீது இராணுவச் சூடு, மன்னார்க் கடற்பரப்பில் மீனவர்மீது தாக்குதல்கள், கிழக்கிலே சுற்றிவளைப்புகள், இராணுவக் கெடுபிடிகள் போன்ற செய்திகள் எதனைக் காட்டுகின்றன?

மோதல் தவிர்ப்புவேளையில், இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்து, மக்களின் அச்சம் போக்கி, சமாதானச் சூழலை ஏற்படுத்தியிருக்க வேண்டியது அரசின் பொறுப்பான கடமை:

அச்சுறுத்திக் கொண்டு மைதிப் பேச்சுக்களைத் தொடருவதில் பயனில்லை.

எனவே - பொறுப்பற்ற விதத்தில் இராணுவச் செயற்பாடுகள் தொடருவதை அரசு மேலும் அனுமதிக்கப் போகிறதா?

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த மீறல்களை அரசு அக்கறையோடு கவனித்து அவை தவிர்க்க ஆவன செய்ய வேண்டும்!

★ முன்னைய புத்தாண்டுகளில்

# பட்டாசு சத்தத்திற்கு பதிலாக துப்பாக்கி சத்தங்களே கேட்டன

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் சித்திரைப்புத்தாண்டில் பட்டாசு வெடிச் சத்தத்திற்கு பதிலாக துப்பாக்கி வேட்டுச்சத்தங்களே கேட்டன. இவ்வாறே கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் புத்தாண்டை கழிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். தற்போது அந்த சூழ்நிலைமாறியுள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு ஜனதிபதி சந்திரிகா தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தமது செய்தியில் மேலும் தெரிவிக்கையில்;

மக்களின் பெரும் ஆணையுடன் பொ. ச. மு, அரசு பதவிஏற்றபின் பிறக்கும் முதல் தமிழ் - சிங்கள புத்தாண்டு இதுவாகும். தேசிய கலாசார தனித்துவத்தை வெளிப்படுத்தும் புத்தாண்டு மரபுகளை பின்பற்றுவதில் சிங்கள - தமிழ் மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். கடந்த 12 வருடகாலமாக வடக்கு-கிழக்கில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக அச்சத்திற்கும் பீதிக்கும் மத்தியிலே பல புத்தாண்டுகள் கழிந்து போயின. பல உயிர்களை பலி கொண்ட கண்ணி வெடிகள ஏனைய குண்டுகள், கொடூரமான துப்பாக்கி வெடிச் சத்தங்கள் என்பன எந்த இடத்தில் எவ்வாறு 'உயிர்களை பலிகொள்ளும் என்ற சந்தேகமும் பீதியும் மக்கள் மனதில் குடிகொண்டிருந்தன.

குறிப்பாக வடக்கு கிழக்கு யுத்தமுனைகளில் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த தமது பிள்ளைகள் எதிர்நோக்கியிருந்த மரண அச்சுறுத்தல்கள் காரணமாக எமக்கு என்ன புத்தாண்டு என்ற கவலையுடன் புத்தாண்டை கழித்த தாய்மாரை நான் நன்கு அறிவேன்.

மறுபுறம் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் புத்தாண்டு காலத்திலேனும் தமக்கு தேவையான அளவு உணவு உடைகளை பெற முடியவில்லை.

நாட்டில் சமாதானம் உருவாக்கப்படவேண்டும் பேதங்கள் இன்றி அனைத்து மக்களும் சமாதானமாக வாழவேண்டும் என்பதே எம்மை பதவியமர்த்திய பொதுமக்களின் அபிலாஷையாக அமைந்தது. கடந்த 6 மாதகாலத்தில் இந்த சமாதான சூழலை முழுநாட்டிலும் ஏற்படுத்தவே எமது முழுச்சக்தியையும்பயன்படுத்தியிருக்கின்றேம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீண்டும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நல்ல பயன் கிட்டியுள்ளது.

கடந்த ஜனவரி 8ம் திகதி முதல் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின் கடந்த 3 மாதங்களாக நாட்டில் சமாதான சூழல் ஏற்பட்டுள்ளது கடந்த 3 மாதகால எல்லையுள் சமாதானத்திற்கு பங்கம் விளைவிக்கும் எதுவித பாரிய சம்பவத்தையும் நாம் கேள்விப்படவோ அல்லது காணவோ இல்லை, அச்சம், சந்தேகமின்றி தென்னிலங்கை மக்கள் மாத்திரமின்றி வடக்கு - கிழக்கு வாழ் மக்களும் தமது பிரதேசங்களில் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இரவு பகலாக கேட்ட குண்டுச்சத்தமும், துப்பாக்கிச் சத்தமும் தற்போது ஒய்ந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

### பலதும் பத்தும்

#### நினைப்பதெல்லாம்...!

நினைப்பதெல்லாம் நடந்துவிடுமா? சோவியத் ருஷ்யாவின் ஜனதிபதியாக இருந்த கோபாசேவ் ... இளைஞனக இருந்தபோது அறிவியல் படிக்க ஆர்வமாயிருந்தார். ஆனல் ..., மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை.

சட்டத்துறையில் இடம் கிடைக்கவே சட்டம் படித்தார் ஆனல வழக்குரைஞராக வரவில்லை. சில ஆண்டுகளுக்குப்பின் அஞ்சல் வழிக் கல்விமூலம் விவசாயம படித்துப் பட்டம் பெற்றார் விவசாயம் செய்தாரா? இல்லை ... 1985ல் கட்சித் தலைவரானர்; ஜனதிபதியானர்.

கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தினர்; ஸ்டாலின் காலக் கொடுமைகளை அம்பலப்படுத்தினர்; குடிப் பழக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்தார். எனினும் ... அரசியலிலும் நிலைத்திருக்கவில்லை ... ?

''ஊழிற் பெருவலி யாவுள?'' ... வள்ளுவரின் வாக்குச் சிந்திக்கத்தக்கது!

— மயூரன்

## இராசி பலன்

15-04-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை—02)

பூரணை மாலை 6-19 வரை, சித்திரை மரணயோகம் பி. இ. 3-22வரை சித்திரா பூரணை விரதம், இராகுகாலம் காலை 9-04 முதல் 10-34 வரை, சுபவேளை, மாலை 3-04 முதல் 4-34 வரை.

மேடம்: தொழில் பாராட்டு சுபநிகழ்ச்சி, மாமனர்உதவி

இடபம்: சந்தேக உணர்வு, வாதத்திறமை, காரியசித்தி

மிதுனம்: மனப்பதட்டம், வேண்டாதஉறவு, வீண்செலவு

கடகம்: குழம்பித்தெளிதல் சகோதரி துன்பம், கவலை.

சிங்கம்: அதிக உற்சாகம், சுபச்செய்தி, நண்பர் வருகை.

கன்னி: முணுமுணுப்பு, உறவால்துன்பம், தைரிய குறைவு

துலாம்; அறிஞர் சந்திப்பு, மனைவி பெருமை, தன்னலம்.

விருச்சிகம்: முரட்டுத்தனம், பயண தாமதம், பணமுடை

தனுசு: பண்பாடு பேணல், சுபகாரியம், தெய்வீகசிந்தனை.

மகரம்: மனமகிழ்ச்சி, மாமியார் பாராட்டு, தானதர்மம்.

கும்பம்: அவதூறு கற்பித்தல், தொழில நஷ்டம், வெறுப்பு.

மீனம்: எதிர்பாராத துன்பம், கண்வலி, புத்திரர் கவலை

— ஜோஸ்யர்

குடியியல் அரசியல் உரிமை

# சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை

[கொழும்பு]

குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்தில் இதுவரை இலங்கை அரசு கையெழுத்திடவில்லை எனத் தெரியவருகிறது.

ஒரு நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல் சம்பவத்தை மேற்படி சர்வதேச நிறுவனங்களுக்கு கடித மூலம் ஒரு தனி நபரால் முறைப்பாடு செய்வதற்கான உரிமையை மேற்படி ஒப்பந்தம் அங்கீகரித்திருக்கிறது. அதேவேளை அம்முறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்வதற்குமான உரிமையையும் அவ்வொப்பந்தம் வழங்குகிறது. இத்தனை காலமும் அப்படியொரு ஏற்பாடு இருக்கவில்லை,

கடந்த காலங்களில் நடந்த படுகொலை சம்பவங்களைப் பற்றியும் விசாரணைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்கள் அரசிடம் கோரியபோதும் அரசு கவனத்தில் எடுக்கவில்லை. உதாரணமாக: சூரியகந்தவிவகாரம். சூரியகந்தவில் கொல்லப்பட்டவர்களது பெற்றோர்கள் எத்தனையோ காலமாக எமது பிள்ளைகள் சூரியகந்தகுழிகளில்புதைக்கப்பட்டதாக அறிகிறோம். விசாரணை செய்யுங்கள்' என்று கோரிய போதும் பல காலமாக அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை.

அவ்விவகாரம் தொடர்பாக அரசுக்கு வெளியில் உள்ள நிறுவனமொன்றிற்கு முறைப்பாடு செய்வதற்கானவசதிகள் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனல் மேற்படி ஒப்பந்தத்தின்மூலம் எந்த பிரஜையும் அரசாங்கத்திற்கு வெளியில் முறையிடலாம். பலநாடுகள் அவ்வொப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டன. ஆனல் இலங்கை அரசு இன்னமும் அதனை அங்கீகரிக்கவில்லை.

அந்த ஒப்பந்த ஆவணத்தின் படி அவ்வமைப்புக்கு முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றி அந்நாட்டிடம் கேள்வி எழுப்பினல் அந்த நாடு விளக்கமளிக்கவேண்டும். பரிகாரம் காணவேண்டும். ஆனல் அந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்காத நாடுகளுக்கு அவ்வொப்பந்தம் பொருந்தாது.

பிரேமதாஸா காலத்தில் இவ்வொப்பந்தம் கையெழுத்திடப்படாமல் இருந்திருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை ஆனல் 'மனித உரிமைகள்' கோஷத்தையே பிரதானமாக கொண்டு ஆட்சியமைத்த இந்த அரசாங்கமும் இன்னமும் கையெழுத்திடாமல் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது- (சி)

# புலிகளை சந்திக்கும் அரச குழு அதிகாரமுள்ளதாக இருக்க வேண்டும்

(கொழும்பு)

தம்மை சந்திக்கவரும் அரச குழு தீர்மானங்கள் எடுக்கக் கூடிய அதிகாரமுள்ள ஒரு குழுவாக இருக்கவேண்டுமென்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருவது நியாயமானதொரு குற்றச்சாட்டே யாகும்.

இவ்வாறு 'தினகரன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் திரு. அனந்தபாலகிட்ணர் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில்;

இப்படியானதொரு முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடைபெறும் போது அங்கு செலலும் குழுதீர்மானங்கள் எடுக்காவிடினும் கூட அதை ஒரு அர்த்தபுஷ்டி உள்ளவையாக, உறுதியானவையாக அந்த தீர்மானங்களைக் கருத்தில் கொள்ளக்கூடிய அளவிற்கு உறுதி வாய்ந்த ஒரு அதிகாரமுள்ள குழுவாக அமையவேண்டும்.

இதன் மூலம் வீண் தாமதங்களை தவிர்க்கமுடியும். இல்லாவிடில் அங்கு கதைத்துவிட்டு இங்கேவந்து முடிவெடுப்பது, பின்னர் இங்கு கதைத்துவிட்டு அங்கே சென்று முடிவெடுப்பதென்பது 'ரெனிஸ்' விளையாட்டில் பந்தை அங்கும் இங்கும் அடிப்பது போலாகவே இருக்கும்.

இரு சாராருக்கும் இடைப்பட்ட தூரம் 250 மைல்களுக்கப்பாலுள்ளது. நாட்டின் முக்கிய பிரச்னை பற்றி பேசுபவர்கள் முடிவெதனையும் எடுக்க முடியாவிடின் அந்த குழு யாழ்ப்பாணம் செல்வதில அர்த்தமில்லை. அந்த தூரம் குறையவேண்டும். அதேவேளை இரு தரப்பு நல்லெண்ணங்களும் இறுக்கமடையவேண்டும்.

எனவே அதிகாரமுள்ள குழு ஒன்றுதான் பேச்சுக்கு வரவேண்டுமென்று புலிகள் கூறுகிறார்கள் என்றல் அவர்கள் தீர்மானங்களை மிகவும் எதிர்பார்க்கிறார்கள் என்றுதான் அர்த்தம் எனவும் கூறினர். (சி)

### இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் முழுநிலா அறிவியற் கருத்தரங்கு இன்று 15ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி தொடக்கம் 5-30வரை சுன்னகம் பொது நூலகத்தில் நடைபெறும்.

''சமூக அபிவிருத்தியில் குடும்பங்களின் பங்களிப்பு'' எனும் பொருள்பற்றி யாழ் பல்கலைக்கழகம், கல்வியியல் துறை விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி உரை நிகழ்துவார்.

### தவக்கால நற்சிந்தனை

''உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்''

(சங். 30: 12)

மண்ணில் நாட்டப்படும் விதை தன்னை அளித்துப் புதுப்பிறப்படைகிறது புதுப் பிறப்படைந்த விதை விருட்சமாகிப் பலன்கொடுக்கிறது யேசுவின் மரணமும், அதன் பலனும் எமக்கு நற்பயன் அளிக்கவேண்டுமாகில், மீட்பின் மகிழ்ச்சியை நாம் சுவைக்க வேண்டுமாயின் புதுப் பிறப்படையவேண்டும் புதுப் பிறப்பின் மூலம் பலனடைய வேண்டும்.

— தா. மைதிலி

பரந்த நிலமிருக்க சிறந்து திரிவானேன்
சிறந்த வளமிருக்க திதைந்து திரிவானேன்

# உலக வங்கியின் உத்தரவுக்கு அரசு பணியக் கூடாது

(கொழும்பு)

உலக வங்கி போன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள் இலங்கைக்கு உத்தரவுகள் பிறப்பிப்பதற்கு அனுமதிகக வேண்டாமென அரச உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வேறு நாடுகளை உதாரணம் காட்டி இலங்கைக்கும் மேற்படி நிதி நிறுவனங்கள் உத்தரவுகள் பிறப்பிப்பதை அனுமதிக்க வேண்டாம் எனவும் இதுபாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அண்மைக் காலமாக உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் உத்தரவுகளின் படியுமே புதிய அரசு செயற்பட்டு வருவதாகவும் அரச நிறுவனங்களையும் திணைக்களங்களையும் தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்கும் இந்த நிதி நிறுவனங்களே அரசை தூண்டியுள்ளதாகவும் பலதத குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அரசுதொடர்ந்தும் உலக வங்கியின் வழிநடத்தலிலேயே செயற்பட்டு வருகிறது. பல உதவித் திட்டங்களை உலக வங்கி நிறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தியாகி அன்னை பூபதிக்கு வலி.மேற்கில் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பகுதியில் அன்னை பூபதியின் 7ம் வருட நினைவை முன்னிட்டு முக்கிய சந்திகள் தோறும் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

சனசமூக நிலையங்கள் அரச, அலுவலகங்கள், பொதுநல அமைப்புகள், வர்த்தக நிலையங்கள் மறறும் பொதுஇடங்களில் அன்னாரின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டு வருகின்றது. மஞ்சள் சிவப்பு நிறக் கொடிகளும் பதாகைகளும் வீதிகள்தோறும் கட்டப்பட்டுள்ளது. -72

### நூல் நிலையம்

(பண்டத்தரிப்பு)

'போரூட்' நிறுவனம் சங்கானையிலுள்ள நீதவான் இடம்பெயர்ந்தோர் அகதிமுகாமில் நூல் நிலையம் ஒன்றை திறந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இதன் திறப்புவிழாவில் வலி.மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சம்பிரதாய முறைப்படி நூல் நிலயத்தை திறந்து வைத்தார். (72)

## படையினரால் கைதான ஆறு பேர் விடுவிப்பு

(கோப்பாய்)

கடந்தவாரம் வளலாயில் இராணுவத்திடம் பிடிபட்ட இருவர் நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரால் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டனர்.

கந்தையா நடேசு(44வயது) வளலாய், இரத்தினம் யோகசுந்தரம் [வண்ணம் 26வயது] ஆகியோரே இந்த இருவருமாவர்.

இதே வேளையில் கடந்த வருடம் கடற்படையால் கடலில் வைத்து பிடித்து செல்லப்பட்ட மேலும் நான்குபேர் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பாலசுப்பிரமணியம் இராமகிருஷ்ணன் (25 வயது) சுற்கோவளம், பருத்திததுறை, ஆறுமுகம் தனராசா (வயது 22) வல்வெட்டித்துறை, சிவகுமார் (20 வயது) மன்னார், நமசுவாயம் முருகுப்பிள்ளை (55 வயது) சி.கணேசலிங்கம் [45 வயது] கிளிநொச்சி ஆகியோரே இந்த நால்வருமாவர். 166-இ

### சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த ஆண்டி செல்லம்மா(வயது60) யாழ் போதனாவைத்தியசாலையில் கடந்த 12ம் திகதியன்று மருத்துவ கிளினிக்குக்கு சிகிச்சை பெற வந்த போது இவ் வைத்தியசாலையில் சாவடைந்து விட்டார். உற்றார் உறவினர் வந்து அவரது சடலத்தைப் பொறுப்பேற்குமாறு மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

வேலைத் திட்டங்கள்

## பாடசாலை ஆரம்பிக்கு முன் தயாரிக்கப்பட வேண்டும்

(உடுவில்)

அடுத்த தவணைச்குரிய பாடசாலை வேலைத் திட்டங்களை பாடசாலை ஆரம்பமாகும் முன்னரே தயாரித்து முடிக்குமாறு உடுவில் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாடசாலைகளில் அதிபர்கள் வகுப்பறைக் சற்பித்தலில் உரிய மணித்தியாலங்களுக்கு வேலை செய்யவேண்டும். ஆசிரியர்களுக்கு முன்னோடியாக அவர் வகுப்பறை கற்பித்தலை செய்து காண்பித்து வழி நடத்த வேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களையும், பயிலுனர் ஆசிரியர்களையும் முககியமான டணிகளில் ஈடுபடுத்துவதை தவிர்த்து நிரந்தரமான ஆசிரியர்களை அப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்

ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி, சம்பளநிலுவைகள், மாற்றியமைக்கப்பட்ட சம்பளக் கடிதங்கள், ஆசிரியர்களுடைய சுயவிபரக் கோவை போன்றவற்றின் பூர்த்தியாக்கப்படாத வேலைகள் இருப்பின் அதுபற்றி உடனடியாக அறியத்தரவேண்டும். இத்தவணை முடிவுக்குள் அவை சீர்செய்து தரப்படும் எனவும் திரு. சு. இரத்தினராசா கூறினார். (109)

## 'ஜெ'யை பதவி விலக கோரி நெருக்கடி

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பின்படி பதவி விலக வேண்டுமென தமிழகஇந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில் ஆசிரியர்பயிற்சிப்பள்ளிகளுக்கு அனுமதிவழங்கியது, கோடைககானலில் ஹோட்டல் ஒன்றுக்கு கட்டட விதிகளுக்கு விலக்களித்திருப்பது, கருங்கல் வெட்டி எடுப்பதற்கு அனுமதி வழங்கியமை ஆலய மூன்று வழக்குகளிலும் தமிழக அரசைக் குறைகூறித் தீர்பபு வழங்கியதையும் அவர் சுட்டிக்காட்டினர்.

தமிழர் எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முதல்வர் ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் நீடிக்கும்வரை ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து கொண்டேபோகும் என்றும் எனவே அவர் பதவி விலக வேண்டுமெனவும் தெரிவித்தார். (க-இ)

காணாமல் போனோர் விவகாரம்

## கிழக்கில் 29.ம் திகதி விசாரணை ஆரம்பம்

[மட்டக்களப்பு]

கிழக்கில் காணமல் போனோர் தொடர்பான விசாரணைகள் இம்மாதம் 29ம் திகதி முதல் அடுததமாதம் 5ம் திகதி வரை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பில் பிரதான கட்டிடம் ஒன்றில் நடைபெறவிருக்கும் இவ்விசாரணையில் தமது உறவினர் சுற்றத்தவர்களை பறிகொடுத்தவர்கள் பலர் சாட்சியமளிககவுள்ளனர்.

கிழக்கில் படையினரால் கைது செய்யப்படும் பெருமளவு தமிழ் இளைஞர்கள் பலர் கொலை செய்யபபட்ட சம்பவங்கள் இடம்பெற்றமை ஏற்கனவே தெரிந்ததே. க இ

### அபிவிருத்திக் கடன்

(கொழும்புத்துறை)

தமிழர் புனர்வாழ்வுக்கழக தென்மராட்சிப் பிரிவினர் கைதடி சோயிலாக்கண்டிக் கிராமங்களில் உள்ள பயனாளிகளுக்கு மீன்பிடி அபிவிருத்திக்கடனாக தலா ஐயாயிரம் ருபா வீதம் அண்மையில் வழங்கினர். - 154

## புதுவருடப் பலன்கள்

மேடம்: இவ்வாண்டு கஷ்டங்கள் ஓரளவு தணியும் அதிகாரிகள ஆதரவு கிட்டுவதுடன் பதவி உயர்வுகளும் சாத்தியமாகும். பெண்களாயின் ஆகஸ்டின் பின்னர் திருமண யோகங்கள் கிட்டும். மாணவர்கள் சிரமங்களின் மூலம் பரீட்சையில் சித்தி பெறலாம்.

இடபம்

எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படும். வாழ்க்கை வசதி குறைவாக உண்டு. தொழிலில் மந்தநிலை இருக்கும். இனசனப் பகையுண்டு. பெண்சள் சில சிரமங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு மத்திம பலனுண்டு.

மிதுனம்

குடும்பத்தில் வேற்றுமைகள் உருவாகும். பண நிலை வளமாக உள்ளது. பொதுப் பணி முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம்உண்டு. பெண்களின் வாழ்கசை வசதிகள் பெருகும். மாணவர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டு.

கடகம்

கடந்த காலத்தில் அனுபவித்ததீயபலன்களிலிருந்துவிடுபட வாய்ப்பு உள்ளது. மனம் போல் வாழ்வு சிறக்கும். திருமணமாகாதவர்களுக்குத் திருமண யோகமுண்டு பெண்கள் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். மாணவர்களுக்குச் சுயமுயற்சி பலிதம் தரும்.

சிங்கம்

தொழில் உயர்ச்சி உண்டு. நோய்வாய்ப்பட்டவர்கள் சுகம் பெறுவர். புத்திரர் சிறப்புண்டு. வீடு, காணி யோகமுணடு. உறவினர் பகைமை அகலும். சுபகாரியங்களுக்கான பண விரயம் உண்டு. பெண்களுக்கு யோகம் தரும் காலமாகும். மாணவர் கல்வியில் சிறப்புப் பெறுவர்.

கன்னி

மறைமுக எதிரிகள் துன்பம் தருவர். தொழிலில் முன்னேறறக் குறைவுண்டு. பணக் கஷ்டம் உருவாகும். குடும்பத்தில் உறவுமுறை சிறப்புத் தராது. பெண்களுக்குப் பலவகையாலும் துன்பங்கள் இருந்துவரும். மாணவர் கஷ்டமுறுவர்.

துலாம்

தொழில்துறை முன்னேற்றம் உண்டு. பணவருவாய் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணங்கள் வெற்றி தரும். உறவினர் ஒத்துழைப்புத் தருவர். பெண்களுக்குப் பலவகைச் சுபீட்சங்களும் குடும்ப உறவில் மகிழ்ச்சியும் உண்டு. மாணவர் அதிக சிறப்படைவர்,

விருச்சிகம்

எதிரிகள் பழிவாங்கத் துடிப்பர். தொழில் பாதிப்படையும். அமைதியற்ற போக்கு வலுவடையும். வழக்கு விவகாரங்களில் வெற்றி பெறுவது கடினம். பெண்கட்கு இடமாற்றம். தொழில் பாதிபபுக்களால் கவலையடைவர். சுப நிகழ்ச்சிகள் தாமதமாகும். மாணவருக்கு கடும் ஊக்கம் தேவை.

தனுசு

சென்ற ஆண்டைப்போல் தொழில்துறையில் மாற்றம் இராது. கடன் சிக்கல்கள் அதிகமாகும் குடும்பக் கவலைகள், இனசன விரோதமுண்டு. பெண்களுக்குப் பலன் சுபீட்சம் தராது. மாணவர் கவலை அடைவர்.

மகரம்

தொழில் உயர்வுண்டு. சுப கருமங்கள் தானாக நிறைவுறும். பொருள் லாபம் உண்டு. குடும்பத்தில் உறவு வலுவடையும். புத்திர பாக்கியம் கைகூடும். பெண்களாயின் நினைத்ததைச் சாதிக்க வாய்ப்புண்டு. பெற்றோர் ஒத்துழைப்பு அதிகமாகும். மாணவர் கல்வியால் உயர்வடையலாம்.

கும்பம்

மனச்சங்கடமுண்டு. தொழில் முன்னேற்றம் குறைவு. பணக் கஷ்டம். பங்காளர் தொல்லை அதிகமாகும். குடும்பத்தில் அமைதிப் போக்குக் காணப்படும். தியாகத்தின் மூலமே மன அமைதி பெறலாம். பெண்களாயின் அதிகாரிகளின் துன்பங்களை எதிர்நோக்குவர். மாணவருக்குப் பிரயாசத்திற்கேற்ற பலன் கிட்டாது.

மீனம்

எதிர்பார்ப்பவை அனைத்தும் சுபிட்சம் தராது மனச் சுமை உண்டு. தொழில் பின்னடைவு காட்டும் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்வர். பண நிலை பாதிப்படையும். பெண்களுக்குக் குடும்பக் கவலை உண்டு மாணவர்கள் அலைச்சலினால் மனச்சஞ்சலம் அடைவர்.

ஜோஸ்யர்

### செயலகத்திற்கு மின்சாரம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தின் சகல பிரிவுகளுக்கும் தற்போது முழுமையாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கே. பொன்னம்பலத்தின் முயற்சியினால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட புதிய 26 கே.வி. வலுவுடைய ஜெனறேற்றர் மூலம் இந்த மின்விநியோகம் செய்யப்பட்டுள்ளது. -71

## ஜேர்மன் இளைஞனின் தவில் கச்சேரி

]கண்டி]

கண்டியில் அண்மையில், ஜேர்மன் நாட்டுக் கலைஞனுக்கும் ஈழத்துக் கலைஞர்களுக்கும் இடையிலான தவில்கச்சேரிப் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

ஜேர்மன் நாட்டுக் கலைஞர் ஒருவர் இலங்கைக்கு உல்லாசப் பயணமாக வந்திருந்த சமயம் கண்டி கட்டுக்கலைப் பிள்ளையார் கோவிலில் விழா ஒன்று நடைபெற்றது.

இதை அறிந்த அவ் ஜேர்மன் நாட்டு வெள்ளை இன இளைஞன் விழாவில் இசைமாரி பொழிந்து கொண்டிருந்த ஈழத்துக் கலைஞர்களிடம், தாமும் இணைந்து மேளக்கச்சேரியில் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்தார். இதனையடுத்து போட்டி ஆரம்பமானது, கலைஞர்களுக்கிடையில் பல மணி நேரம் மேளக்கச்சேரி நடந்தது.

ஜேர்மன் இளைஞன் ஈழத்துக்கலைஞர்களை சபையில் வெகுவாகப் பாராட்டினர். ஈழத்துக் கலைஞர்கள் ஜேர்மன் கலைஞனின் இசை ஆர்வத்தையும் வெகுவாக வியந்தனர். (155-சி)

# 'மே' நாளை சிறப்பிக்கும் முகமாக முன்னோடி ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

1995 மே நாள் சிறப்பாகவும், எமது மக்களது அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும் எனும் நோக்கில், வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள் கூட்டுறவு மற்றும் அரசகூட்டுத்தாபன ஊழியர்கள் மே நாளுக்கான முன்னோடி ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்

மேநாளின் மேன்மையை உழைக்கும் மக்களது உறுதியை வெளிக் கொணரும் வகையில் முன்னோடிக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

தமிழீழ மக்களது நாளாந்த பிரச்சினைகளைப் புறந்தள்ளிவிட்டு, தம்மால் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்க மறுத்து, சமாதானம் எனும் போலி முகங்காட்டிவரும் பேரினவாத சிறிலங்கா அரசின் கபடத்தினை அனைவரும் புரிந்துகொண்டு வருகின்றனர்.

இராணுவ முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது நாளாந்த பிரச்சினைகளை தமது மேலாதிக்க இராணுவ நலன்களுடன் இணைத்துப்பார்க்கும் சிறிலங்கா அரசினது, மெய்யான நிலைப்பாட்டை எடுத்தியம்புவதாக இம்முறை மேநாள் முன்னெடுக்கப்படும். பேரணி, பொதுக்கூட்டம், கலை நிகழ்வுகள் யாவும் பேரினவாதக் கொடூரத்தினின்றும் தமிழீழ மக்கள் தம்மைத் தாமே தற்பாதுகாப்பதை முன்னிலைப்படுத்துவதாக விளங்கும் வழமைபோன்றபேரணியின் ஊர்திகளும் இடம்பெறும் இன்றைய வரலாற்றுக் கட்டத்திற்கேற்ப சித்தரிப்புக்களைக் கொண்டுள்ள சிறந்த ஊர்திகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான போட்டிகளும் உச்சமாகவே இருக்கும்.

தேசிய விடுதலைப்போராட்ட வரலாறும், மனதைத்தொடும் சம்பவங்களும், பேரினவாதம் தோற்றுவித்த பொருளாதாரத் தடைகள் மத்தியிலும், உழைக்கும் மக்கள் முனைப்பாகச் செயற்படுவதால், சுயசார்புப் பொருளாதார மேம்பாடு, பேரினவாதத்தின் இன்றைய பல்வேறு முகங்கள், சிறிலங்கா அரசின் தமிழீழ மக்களை ஏமாற்றி திசைதிருப்பும் திட்டங்கள், மக்கள் அனைவரும் கூட்டாகச் செயற்பட்டு, பலம் பெறல், பெண்விடுதலை, சுரண்டலற்ற, அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்க மக்களது பங்களிப்பு, எம்மீதான அனைத்துலகப் பார்வை.

மேற்கூறியவற்றை தத்ரூபமாக சித்தரிக்கும் ஊர்திகளே பரிசுகளுக்காகத் தெரிவுசெய்யப்படும். வரும் 17-04 1995 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் நடைபெறவுள்ள மே நாள் குறித்த விசேட கலந்துரையாடலில், வெகுஜன அமைப்புகள், அரச கூட்டுத்தாபன கூட்டுறவு, தனியார் துறை ஊழியர் சங்கங்கள், கூட்டுறவுத்துறை இயக்குனர் சபை உறுப்பினர்கள், கிராமிய அமைப்புகள், மாதர் அமைப்புகள், மற்றும் சனசமூக நிலைய, விளையாட்டுக் கழக நிர்வாகிகள் முதலியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# "எமது தேசியத்தை வளர்க்க முயற்சிகள் எடுக்க வேண்டும்"

— புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்[

இழந்த உரிமைகளை வென்றெடுப்பதுடன் எமதுதேசியத்தையும் வளர்த்தெடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற கொள்ளவேண்டும். இன்றைய மாணவர் பருவம் நாளைய மனிதனின் பருவம். எமது மாணவர்கள் மத்தியில் கல்வியைப் போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது கலை, கலாச்சாரம் பண்பாடு போன்ற எமது தேசியததையும் நாம் வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை. பண்பாட்டு அவையினரால் நடத்தப்பட்ட கலை பூங்கா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விடுதலைப் புலிகள கலைப்பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கை கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

திரு புதுவை இரத்தினத்துரை தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் இன்று பலவகையான துன்பங்கள், கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வகையான துன்பங்கள் கஷ்டங்களை எமது அடுத்த சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லக்கூடாது. எமக்குக் கிடைக்காத சகல வசதிகளும் எமது அடுத்த சந்ததிக்குக் கிடைக்க வேண்டும். எமது அடுத்த சந்ததி சுதந்திரமாகவும், சுபிட்சமாகவும், சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்பதற்காகவே இன்றைய போராட்டம் நடைபெறுகின்றது.

மாணவர் பருவம் கல்விக்குரிய காலமாகும். இந்தப் பருவத்தில் நாம எமது கலவியில் மேலோங்கி நிற்கவேண்டும். உலக நாடுகளுடன் சரிநிகர் சமமாகப் பழகுவதற்குக் கல்வி அவசியம். ஆனல் நாம் நிலையாக வேரூன்றி நிற்பதற்கு ஒரு நிலம் எமக்கு அவசியமாகிறது. நாம் ஒரு நிலையாக நிற்பதாகவே இன்றைய போராட்டம் நடைபெறுகின்றது.

மாணவரின் முழுமையான வளர்ச்சிக்குக் கலவி இருந்தால் பட்டும் போதாது. கலை பண்பாடுகளும் இணைந்திருக்க வேண்டும். ஒரு மாணவனின் உள்ளத்தில் நல்ல பண்புகளை வளர்த்தெடுக்கவேண்டும். சமுதாயத்தில்ஒருமுழுமனிதனுகத் திகழவேண்டுமாயின் மாணவர்கள் மத்தியில் கலை, கலாசாரம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் மத்தியில் இந்த உணர்வுகளை எடுத்துக் காட்டவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு யோசேப் பிரான்சிஸ் அடிகள் ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள் பாடசாலைமாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(162-ரி)

## வீரவணக்கமும நினைவுக்கல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 திகதி திருமலையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த வீரவேங்கை பாரதிதாசன்/மதி [கிருஷ்ண பிள்ளை கிருஷணரஞ்சன், காங்கேசன்துறை, மோகன் வீதி, ஊரெழு கிழக்கு) யின் வித்துடல் திருமலையில்விதைக்கப்பட்டுவிட்டமையால், அவரது திருவுருவப்படம் இன்று 15ம் திகதி மாலை 4 மணிக்கு பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் அவரது இல்லத்திலிருந்து [எடுத்துச் செல்லப்பட்டு ஊரெழு கிழக்கு வளர்பிறை ச. ச. நிலையத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதையுடன்கோப்பாய் மாவிரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரது நினைவுக்கல் நாட்டப்படும்.

## ஊழல், கொலை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையா என்பதை கண்டறிவதற்கு தற்போதைய அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுள்ளார்

பலர் என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டிருக்கின்றார்கள் ஆகவே ஆணைக்குழு விசாரணையை நடாத்தி நான் இவற்றில் சம்பந்தப்படவில்லை என்று அறிவிக்கவேண்டுமென்று சிறிசேன கூரே தெரிவித்தார்.

(ம-ரி)

# கால் நடை கன்றுகள் இலவச பராமரிப்பு

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிரமாண அடிப்படையிலான இவ்வருட மூலதன ஒதுக்கீட்டின்கீழ் கால்நடைகளுக்கான செயற்கைமுறை சினைப்படுத்தலின் பயனாக இவ்வருடம் தை மாதத்திலிருந்து பிறக்கும் கன்றுகள் அனைத்துக்குமான முதல் மூன்று மாதகால பராமரிப்புக்கள் தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவினூடாக இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய இப்பிரிவில் உள்ள கால்நடையாளர்களின் கால்நடைகள் செயற்கை முறைச் சினைப்படுத்தல்மூலம் பிறக்கும் கன்றுகள், இப்பகுதி கால்நடை வைத்தியரினதும், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரினதும் கண்காணிப்பின்கீழ் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

இக்காலகட்டங்களில் கன்றுகளுக்குத் தேவையான பூச்சி மருந்து, கனிப்பொருட் கலவை, நோய்க்கான மருத்துவ சிகிச்சை போன்றன இலவசமாக வழங்கப்படும்.

109-ரி

# கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சை

(பருத்தித்துறை)

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில கிராமங்கள் தோறும் பசுக்களுக்கான கர்ப்பச் சிகிச்சை, கர்ப்பப் பரிசோதனை என்பனவற்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

கால்நடைப் பகுதி டாக்டர் ஆர். எஸ் நவரட்ணம் கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சைகளை வழங்குகிறார்.

அத்துடன் பசுக்களுக்கான கர்ப்பச சிகிச்சை முகாம் மாதந்தோறும் தெரிவு செய்யப்பட்டகிராமங்களில் நடாத்தப்பட்டு வருவதாகவும் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

-52

# கிராமிய சமூக மேம்பாட்டு ஆசிரியர் கருத்தரங்கு

(உடுவில்)

வலிகாமம் கல்விக்கோட்ட கிராமிய சமூக மேம்பாட்டு ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தப்பட்டது.

ஸ்ரீ பாரதி பாடசாலை அதிபர் திரு. கு. கேசவன் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்புக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் திரு. த. துரைசிங்கம், திரு.ப. விக்கினேஸ்வரன் ஆகியோர் சலந்து கொண்டனர்.

தமிழீழ தேசிய கொடியை வலிகாமம் கோட்டப் பொறுப்பாளர் ஏற்றினர். கிராமிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. கே பாப்பா ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார்.

கருத்தரங்கில் கிராமிய மக்களுடையதும், மாணவர்களினதும் எண்ணங்கள்பற்றி யாழ். மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த திரு. அரசண்ணவும், எமது இயக்கமும் இன்றைய நிலைப்பாடும் பறறி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு டொமினிக்கும், மாணவர் கல்வி வளம்படுத்தல் பற்றி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ், சி. எஸ். சிதம்பரநாதனும், மற்றும் அதிபர் திரு. சி நாகராசா. யாழ். பல்கலைக் கழக வர்த்தகத்துறை விரிவுரையாளர் திரு. இ. இரட்ணம் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர், 109-ரி

## கரபந்தாட்ட போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பவானி விளையாட்டுக் கழக 2-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய கரபந்தாட்ட (ஒவர்கேம்) சுற்றுப் போட்டி இன்று வண்ணை சிவன் வடக்கு வீதியில் ஆரம்பமாகிறது.

மூன்று நாட்கள் பகலிலும் இரவிலும் நடைபெறும் இச் சுற்றுப்போட்டியில் 40 கழகங்கள் பங்குபற்றுகின்றன. -சி

## மீனவர்களுக்கான வலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கடற்றொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கியதன் மூலம் பெருமளவான கடற்றொழிலாளர்கள் நன்மை பெற்று வருகின்றனர்.

வடதமிழீழத்தில் வருமானம் குறைந்த கடற்றொழிலாளர் குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த, அவர்களுக்கு தேவையான வலைகளை கடனாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கடல்வள அபிவிருத்திப் பகுதி வழங்கியுள்ளது. ஒருவருக்கு ரூபா 5000/- பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

கலைப் புலவர்மணி, வித்துவான் திரு வ. செல்லையாவின் பவள விழா, நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி காளியம்பாள் ஆலயத்தில் திரு. சி. இராமதிலகம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் க பாலசுப்பிரமணியம் கலந்துகொள்வார்.

ஆசியுரையை சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்களும், அருளுரை மெய்கண்டதேவர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீலத்திருசித்தாந்த சரஞானப் பிரகாசசிவம், கைலை சர்வோதய ஆதீனம் ஸ்ரீ சிவபாலசுந்தரனர் சுவாமிகள் ஆகியோர் வழங்குவார்கள்.

## வீடு வெறிச்சோடிப் போனது எடா சிவானந்தா!

புது வருடம் வந்தது எடா—சிவானந்தா!—உன்
புன்னகையும் போனது எடா சிவானந்தா!
புத்தாண்டு வந்தது எடா சிவானந்தா—உன்
புன்னகையைக் காணன் எடா சிவானந்தா
வீட்டுக்குப் போனன் எடா சிவானந்தா—வீடு
வெறிச் சோடிக் கிடந்தது எடா சிவானந்தா!
பாட்டைப்போல் மனைவி அழுதாள் நண்பா—உன்
பாலர்களும் அழுதனரே சிவானந்தா
காட்டு எருமை வாகனத்தில் வந்த அந்த—கொடும்
காலன் உன்னைக் கவர்ந்தானே சிவானந்தா
நாட்டுக்குச் சேவை செய்த சிவானந்தா—உனக்கு
நாவூறு பட்டது எடா சிவானந்தா
மீட்டும் இங்கு வருவாயே சிவானந்தா—மன
வீட்டில் இருக்கின்றய் நீ சிவானந்தா.

(சி-1454) — பாவலவன் பா. சத்தியசீலன்

சர்வதேச நாணய நிதியத்திற்கு

# அறுபது கோடி ரூபா கடன் இலங்கை செலுத்த வேண்டும்

[கொழும்பு]
சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை அரசு ஆறு கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

1994 டிசம்பருக்குப்பின் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடனுதவி எதுவும் வழங்கவில்லை.

இதேவேளை சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தத் திட்டத்திற்கு மேலும் சலுகைகளுடன் கூடிய கடன்களை வழங்குவது தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாக நாணய நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். -ரி

# 'தலசீமியா' நோய் வேகமாக பரவுகிறது

(கொழும்பு)
தலசீமியா என்னும் ஒரு வகை புதிய நோய் தற்போது வெகுவேகமாகப் பரவிவருவதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

செங்குருதிச் சிறு துணிக்கைகள் தமது வேலையை சரிவர செய்ய இயலாமையினால் இந் நோய் தோன்றுகிறது.

ஒட்சிசனை உடலின் சகல இழையங்களுக்கும் கொண்டு செல்லும் வேலையினை செங்குருதிச் சிறுதுணிக்கைகள் மேற்கொள்கின்றன. தலசீமியா நோய் ஏற்பட்டால் செங்குருதிச் சிறுதுணிக்கையின் செயற்பாடு ஸ்தம்பித்து போகும் அபாயம் ஏற்படும்.

உலகம் முழுவதிலும் 2·5 மில்லியன் மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் மட்டும் 600 நோயாளிகள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பரம்பரை நோயான இதனால் பீடிக்கப்பட்ட குழந்தைகளில் வெளிறிக் காணப்படுதல், வாந்தி எடுத்தல் போன்ற தன்மைகள் காணப்படும்.

இந்நோயை கட்டுப்படுத்த வென கொழும்பில் ஒரு ஆய்வு நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. க-சி-ரி

## குமண வருகிறது

(நெல்லியடி)
கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிய குமண கப்பல், ஞாயிறு அல்லது திங்கள் காலை பருத்தித்துறையை வந்தடையும்.

இக் கப்பலில் யாழ் தபால் திணைக்களத்திற்குரிய தபால் பொதிகளும் எடுத்துவரப்படவுள்ளதாக துறைமுகவட்டாரங்கள் தெரிவித்தன. 160-ரி

## 5ம் கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)
திரிகா, தலைவர் பிரபாகரனுக்கு இறுதியாக அனுப்பி வைத்துள்ள கடிதம் மிகவும் முக்கியமானது என்று தமிழ் அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ரி

# சவூதியில் மூவருக்கு சிரச்சேதம்

(றியாட்)
சவூதி அரேபியாவில் கடந்த வெள்ளிக்கிழமை மூவர் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

போதைவஸ்துக்கடத்தல் மற்றும் பாலியல் வன்முறை போன்ற செயல்களில் ஈடுபட்டமைக்காகவே இவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் பிரஜை' பிலிப்பைன்ஸ் பிரஜை உட்பட மூவர் இவ்வாறு சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

1993ம் ஆண்டு 69 பேர் வரையில் இவ்வாறு சவூதி அரேபியாவில சிரச்சேதம் செய்யப்பட்டனர். க-சி-

## சித்திரைக் கஞ்சி

(யாழ்ப்பாணம்)
கோப்பாய்-மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரைக் கஞ்சி வார்ப்பு வைபவம் இன்று சனிக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

## உண்ணாவிரதம்

[பண்டத்தரிப்பு]
தியாகி அன்னை பூபதியின் 7-ம் வருட நினைவை முன்னிட்டு சங்கானை வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வீதியில் எதிர் வரும் 17-ம், 18-ந் திகதிகளில் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது. -72

# தென்னாபிரிக்காவில் அமைச்சரவையிலிருந்து வின்னி மீண்டும் நீக்கம்

(ஜொகனஸ்பேர்க்)
தென்னாபிரிக்கா ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பிரிந்து வாழும் தன்னுடைய மனைவி வின்னி மண்டேலாவை மீண்டும் அமைச்சரவையிலிருந்து நீக்கியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு வில்லி மண்டேலா தனது பதவியை துஷ்பிரயோகம் செய்ததற்காக அமைச்சரவையிலிருந்து ஜனாதிபதி மண்டேலா விலக்கினார்.

தன்னை அமைச்சரவையிலிருந்து நீக்கியதை எதிர்த்து வின்னி மண்டேலா நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார் ஜனாதிபதி மண்டேலா சட்டவிதிகளுக்கு முரணாக நடந்துகொண்டார் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் வின்னி மண்டேலாவை அமைச்சரவையில் ஜனாதிபதி மண்டேலா இணைத்துக் கொண்டார். தற்பொழுது வின்னிமண்டேலாவை அவர் மீண்டும் அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டார். வி ரி

# க.பொ.த. (சா/த)பரீட்சை மேலும் சில முடிவுகள்

(நெல்லியடி)
கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில்மேலும்சில பாடசாலைகளின் பெறுபேறுகள்.

**பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி**

8டி ஒருவர் செல்வி ஜெயந்தினி தணிகாசலம், 6டி ஒருவர் 4டி மூவர்

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

8டி ஒருவர் கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன், 7டி ஐவர், 6டி 8 பேர்,

**நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி**

8டி ஒருவர் செல்வி ஸ்ரீ ரேணுகா

**கரவெட்டி விக்கினேஸ்வரா**

5டி 3சி பன்னிரண்டு பேர்

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**

7டி ஒருவர் செல்வி ஜெயகௌரி புஸ்பநாதன், 6டி 4 பேர், 5டி 6 பேர், 4 டி 11 பேர்.

**பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்**

4டி ஒருவர்

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

8 டி ஒருவர்

**மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்**

5டி 2சி 1எஸ் ஒருவர், 3டி 4சி 1எஸ் இருவர், 2டி 4சி 2எஸ் மூவர், 1டி 22 பேர்

**யா/அத்தியார் இந்துக் கல்லூரி-நீர்வேலி**

6டி 2சி ஒருவர் 5டி 3சி ஒருவர், 4டி 3சி ஒருவர், 3டி 3சி 2எஸ் ஒருவர், 2டி 4சி 2 எஸ் 3 பேர் 1டி -சி, 3 எஸ் 13 பேர் 109-ரி

## அரசு-புலிகள் இடையி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அவர் இந்த விஜயத்தின் போது இந்திய அரசுக்கு எடுத்துரைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் முடிவடைந்த பின்ரும் ஒரு சில தினங்கள் ஜனாதிபதி சந்திரிகா பாரிஸில் தங்கியிருப்பார். இதனைத் தொடர்ந்து மே 2-ம் திகதி அவர் புதுடில்லி புறப்படுவார்.

மே 3-ம், 4-ம் திகதிகளில் சார்க் தலைவர்களின் உச்சி மாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இரண்டு மாதகாலப் பகுதியில ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவிற்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தோனேஷியா பயணமாகும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்து புதுடில்லி சென்று ஜனாதிபதி சந்திரிகாவுடன் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வார். இ-ரி

## மாணவருக்கு பாராட்டு

[உடுவில்]
1994ம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் பாடசாலையில் நடைபெற்ற விழாவில் பாராட்டப்பட்டு தங்கப் பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

செல்வன் ஐ. சதானந்தன் என்பவர் கணிதபிரிவில் 4ஏ பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில இரண்டாமிடத்தையும் தேசிய மட்டத்தில் 4ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அதேபோல செல்வன் செ. யேசுதாஸ் கலைப்பிரிவில் 3ஏ 1பி பெற்று மாவட்ட மட்டத்தில் ஏழாம் இடத்தை பெற்றுள்ளார். . 109

## மூளை மலேரியா இளைஞர் மரணம்

[நெல்லியடி]
மூளை மலேரிய நோயினால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் மந்திகை மருத்துவமனையில் மரணமானார்.

புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த மாணிக்கவாசகர் கமலேந்திரன் (வயது 20) என்னும் இளைஞரே இவ்வாறு மரணமானவராவார். -160

## ஷார்ஜா கிரிக்கெட் ஆசிய கிண்ணத்தை

# இந்தியா வென்றது

(ஷார்ஜா)
ஷார்ஜா கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா- இலங்கையை 8 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்று ஆசியக் கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 230 ஓட்டங்களைப் பெற்றது. குருசிங்கா 85 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியா 41-1 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 233 ஓட்டங்களைப் பெற்றது. கப்டன் அசாருதீன்-90 ஓட்டங்களுடனும், சித்து 84ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தார்கள். டெண்டுல்கார்-41, மனோச்பிரபாகர்- 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இக்கிரிக்கெட் போட்டித் தொடரில், சித்து சிறந்த ஆட்டக்காரராகவும், அஸாருதீன் இறுதியாட்டத்தில் சிறந்த ஆட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு ஆசிய வெற்றிக் கிண்ணத்துடன் 'நூர்க்கான்' சுழல்கேடயமும் 30ஆயிரம் அமெரிக்கடொலரும் பரிசாகக்கிடைத்தது. வி-ரி

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வேற்றியுள்ளது. இதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்'' என்று தெரிவித்தார்.

இராணுவத் தளபதி நேற்று பலாலி, வசாவிளான், பூநகரி, மண்டைதீவு, ஆனையிறவு ஆகிய இராணுவ முகாம்களுக்குச் சென்று இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றியுள்ளார். இராணுவத்தளபதியுடன் இராணுவ சேவா வனித்தா பிரிவின் தலைவி லலிதா டி சில்வாவும் சென்று இராணுவத்தினருக்கு பல பொருட்களை பரிசாக வழங்கியதாவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-ரி

## சென்னையில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]
இச்சம்பவத்திற்கு முஸ்லிம் தீவிரவாதிகளே காரணமென பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்,

இக்குண்டு வெடிப்பை அடுத்து சென்னையிலுள்ள முஸ்லிம் மசூதிகள் யாவும் பொலிசாரினால் தீவிர சோதனை நடவடிக்கைகளுக்குள்ளானது. ரி

## அரசு—புலிகள்

(1ம பக்கத் தொடர்ச்சி)
காண மூன்றுமாதகால அவகாசம கேட்டிருக்கிறார். இதன மூலம் அவர் தன்னைஒரு பேரபேச்சு வல்லுநராக இனம் காட்டியிருக்கிறார் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ரி

## உயர்மட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கலந்துரையாடல் நடைபெற்றது.

4-ம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவண. கெனனத் பெர்ணண்டோ, கலாநிதி ஜெயதேவ உயாங்கொட, திரு. சார்ள்ஸ் அபயசேகரா ஆகியோர் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்கள் கேணல் அனுருத்த ரத்வத்த, பேராசிரியர் ஜீ. எல். பீரீஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர். -ரி

## கடத்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நிலையத்தில் கடத்தல்களை முறியடிப்பதற்காக நவீன இயந்திரங்களும் தற்போது பொருத்தப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் மூலம், பயணிகளின் பொதிகளில் இருக்கும் கடத்தல் பொருட்களை மிக எளிதில் கண்டு பிடிக்க முடியும் என்றும் சுங்கப் பகுதியினர் தெரிவித்தனர். வி-ரி

## மட்டு

1-ம் பக்கத் தொடர்ச்சி
கிறது. சுற்றிவளைப்பு, கைது நடவடிக்கை உட்பட தமிழர் மீதான கெடுபிடிகளும் நாளாந்தம் அதிகரித்து காணப்படுகின்றன,

மட்டு மாவட்டத்தில் படையினரின் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எந்தளவுக்கு சமாதானத்தைத் தரப்போகின்றது என்பது தான் இன்றைய கேள்வி என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

மட்டு நகரில் தற்போது இரவு நேரங்களில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரவு நேரங்களில் திடீர் திடீரென பொதுமக்கள் குடியிருப்புக்களுக்குள் சென்று மக்களை துன்புறுத்தியும் வருகின்றனராம். ரி

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613,